1986 மே 13]

வில்லிவாக்கம் ராஜாஜி நகரில் டிரான்ஸ்பார்மர் மாற்றுதல்

756.—(*வினா எண் 8423) திரு. வி. பி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

வில்லிவாக்கம் ராஜாஜி நகரில் புதிய டிரான்ஸ்பர்மரை வைக்கும் பணி எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிரான்ஸ்பார்மர் வைக்கும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 757 முதல் 759 வரை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள்

760—(*வினா எண். 3957) : திரு க. இரா. சின்னராசு : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கிருஷ்ணகிரி வட்டத்தில் ஏற்கனவே ஒரு சிப்காட் தொழிலகம் ஏற்பாடு செய்து, அது நல்லமுறையில் வளர்ச்சி பெறாத நிலைமையில் இருக்கிறது. இப்போது அந்தப் பகுதி பல்வேறு வகைகளில் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. ஆகவே அதைப் பின் தங்கிய வட்டமாக அறிவித்து வளாகத்தில் எந்தெந்த வகையில் மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் முயற்சிகள் செய்யப்பட்டு உள்ளன என்பதை அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே ஏ. பி.சி. என்ற மூன்று பிரிவுகளின் கீழ், இவைகளை எல்லாம், ஆராய்ந்து வருகிறோம். தற்போது கிருஷ்ணகிரி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கலாமா என்று அரசு

ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஆராய்ச்சி நிலையிலே இருக்கிற காரணத்தால், மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கு இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, No indusiry District என்பதற்குப் பதிலாக No industry Block என்ற செயற்குறிப்பை மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படியானால் எந்தெந்த வட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிந்துரைகளை மத்திய பேரரசுக்கு மாநில அரசு அனுப்பி இருக்கிறது.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசால் தொழில் துறையில் பிற்படுத்தப் பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளை மைய அரசும் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்க மாநில அரசு முயற்சிகள் எடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சியை மாநில அரசு தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருகிறது. அநேகமாக அதில் நல்ல சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையும் மாநில அரசுக்கு இருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்க செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்போல் தமிழ் நாடு முழுவதும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக புதிதாக வேறு பகுதிகள் இணைக்கப்பட்டிருக்கின்றனவா? அது பற்றிய உத்தேசம் அரசுக்கு உண்டா? அதில், சோலை மாவட்டத்திலே புதிதாக ஏதேனும் பகுதிகள் இணைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே புதிதாக பல இடங்களை அறிவிக்கவேண்டுமென்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. தனி கேள்வி போட்டால் மற்றவைகளை விளக்கமாக சொல்ல ஆயத்தமாக இருக்கிறேன்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவித்ததற்கு நானும்

[1986 மே 13)

நன்றி சொல்லிக்கொள்கிறேன். கிருஷ்ணகிரியிலே தொழில் மையம்—தொழிற்பேட்டை இருக்கிறது. கிருஷ்ணகிரி வட்டத்திலே கிருஷ்ணகிரி, காவேரிபட்டிணம், பருகூர் போன்ற மூன்று தொகுதிகள் இருக்கின்றன. கிருஷ்ணகிரியிலே தொழிற்பேட்டை இருக்கின்ற காரணத்தினால், பருகூர் தொகுதியிலேயும், காவேரிபட்டிணம் தொகுதியிலேயும் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கி பல்வேறு தொழில்களை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது கிருஷ்ணகிரிதான் அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. மற்றவைகளில் காலம் செல்லச் செல்ல வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

761.—(*வினா எண். 8170): திருமதி டி. யசோதா: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் வட்டாரத்தை தொழிற்துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு க. இராசாராம்: இல்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வட்டம் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமான தொழிற்சாலைகள் இல்லாத சூழ்நிலை இருக்கின்றபோது, அதனை அரசாங்கம் கருணை உள்ளத்தோடு மறுபடியும் பரிசிலித்து, அதை தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், ஏறக்குறைய 800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அந்தப் பகுதியில் 372 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு தொழிற்சாலைகள் ஏற்கனவே இருக்கின்றன. ஆகவே, செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, மதுராந்தகம் போன்றவைகள் மட்டும் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டு அதனாலே அரசாங்கம் பல சலுகைகள் கொடுப்பதாக அறிவித்து அதனுடைய அடிப்படையிலே தொழில்